1992 மார்ச் 23]

வளர்த்தல், பன்றி வளர்த்தல் போன்ற அனைத்து கால்நடைத் துறை சம்பந்தப்பட்ட பணிகளுக்கும் கடன் வழங்கிக் கொண்டு தான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 317 — திரு, ஆர், சிங்காரம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்,

317—

ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்ட பட்டா வழங்கல்,

*2792, திரு, ஆர், சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம். பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு காலனி வீடுகள் கட்ட (32 பேருக்கு) நில ஆர்ஜிதம் செய்ததை துரிதப்படுத்தி பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது,

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வட்டி தள்ளுபடி செய்வது குறித்து பரிசீலிப்பதாகச் சொல்லியதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையை தட்டுதல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா உறுப்பினர்களும் கரவொலி எழுப்பி நன்றியைத் தெரிவித்து இருக்கிறார்கள்,

திரு. ஆர். சிங்காரம்: தலைவர் அவர்களே. ஆகவேதான் எப்போதும் புரட்சித் தலைவி என்றால் புரட்சித்தலைவிதான், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகச் சொல்ல வந்தேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள், இந்த மழவேனிற்காடு கிராமத்தில் 32 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க வேண்டுமென்று தனி நபருடைய நிலத்தை ஆர்ஜிதம் செய்து பணம் இன்னும் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று அறிகிறேன், அவர்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்பட

வில்லை, அப்படி பட்டா வழங்கினால்தான் தொகுப்பு வீடுகள் வழங்க முடியும், ஆகவே. 2, 3 ஆண்டுக் காலமாக இது நிலுவை யில் இருக்கிறது, இதைத் துரிதப்படுத்த ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தஞ்சாவூர் மாவட்டம். பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு கிராமத்துக்கு பட்டா வழங்குவது சம்பந்தப்பட்ட 4/1 செயற்குறிப்பை பட்டுக்கோட்டை தனி வட்டாட்சியர் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள், அதை அரசுக்கு அனுப்பி வைப்பதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், வந்தவுடன் அதுபற்றி நட வடிக்கை துரிதப்படுத்தப்படும்,

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதுபோன்று நிலத்தை ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்குவதில் 2. 3 ஆண்டுகள் காலதாமதம் ஆகிறது, இதற்கு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அல்லது ஒரு குறிப்பிட்ட மாதங் களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு நிர்ணயம் செய்ய முன்வருமா ? அவர்களுக்கு உடனடியாக தொகுப்பு வீடுகள் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனைப்பட்டா வழங்கிய பிறகு தான் தொகுப்பு வீடுகள் கொடுப்பது பற்றி பரிசீலிக்கப்படும், மனைப் பட்டா சம்பந்தப்பட்ட கோப்புகள் துரிதப்படுத்தப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, ஜி, பழனிசாமி, மழவேனிற்காடு கிராமத்தில் பட்டா வழங்குவது பற்றியது. அதற்கான துணைக் கேள்வியாக இருக்க வேண்டும்,

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆதிதிராவிடர் தெருவிற்கு காலனி வீடுகள் கட்டு வதற்கு இடம் கையகப்படுத்தும் போது கோர்ட்டுக்குப் போவதைக் குறித்து அரசு தடை விதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது சட்ட சம்பந்தமான விவகாரம், சட்டத் துறையின் மூலம் கலந்து ஆலோசித்து. நடவடிக்கை எடுக்கப்படும்-

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 318, திரு. ஆர், பி. பரமசிவம் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்,